**29.07.2026 புதன்கிழமை**

**காலை 10.00 மணிக்கு**

**நடைபெற்ற சாதாரண**

**மன்றக்கூட்ட தீர்மானங்கள்**

**ம.அ.8.நக.எண்.4421/2026**

**ஆணையர் அவர்களின் 15.07.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 273/2026** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 8 (அண்ணா நகர்), கோட்டம் – 108, ஸ்பெர்டாங் சாலையில் உள்ள பழைய மத்திய தார் கலவை நிலையத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 8 (அண்ணா நகர்), பகுதி-23, கோட்டம் -108, ஸ்பெர்டாங் சாலையில் உள்ள பழைய மத்திய தார் கலவை நிலையத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு அலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும், இக்கட்டிடத்தை இடித்து புதியதாக தரக்கட்டுப்பாட்டு கட்டிடம் அமைக்க தரக்கட்டுப்பாட்டு துறை மூலமாக 25.02.2026 அன்று கடிதம் வரப்பெற்றது.

எனவே இந்த கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் இந்த பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அகற்ற வேண்டியது அவசியமான பணியாக உள்ளது.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பு | ரூ.6223.626/- |
| 2 | இடிக்கப்படவுள்ள கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1963ஆம் ஆண்டு |
| 3 | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு | 4318.723 ச.அடி |
| 4 | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் |
| 5 | கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | தரக் கட்டுப்பாட்டு அலுவலக கட்டிடம் |
| 6 | இடிப்பதற்கு அவசியம் என்ன? | பழுதடைந்த நிலையில் உள்ளதால் |

எனவே, மண்டலம் - 8 (அண்ணா நகர்), பகுதி- 23, கோட்டம் - 108 ஸ்பெர்டாங் சாலையில் உள்ள பழைய மத்திய தார் கலவை நிலையத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “22.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.56/2026, நாள்.22.07.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**<u>நதுநக.எண்.D1/0007/2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 04.07.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 274/2026** **பொருள் எண்.02**

## <u>தானப்பத்திரம்</u>

மண்டலம்-06, கோட்டம்-71ல் Mr.S. Narender அவர்கள் New Door No.70, Old Door No.114, Madhavaram High Road, Perambur, Chennai-600011 comprised in R.S.No.2/11A as per patta Old R.S.No.2/11A Part, T.S.No.101, Block No.12 of Siruvallur Village, Kolathur Taluk, Chennaiல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/00923/2026, நாள்:14.02.2026ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 223.00ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 12.80மீ அகல Madhavaram High Road அமையபெற்றுள்ளது. Madhavaram High Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 24.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 33.75ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. S. Narender அவர்களிடமிருந்து New Door No.70, Old Door No.114, Madhavaram High Road, Perambur, Chennai - 600011 comprised in R.S.No.2/11A as per patta Old R.S.No.2/11A Part, T.S.No.101, Block No.12 of Siruvallur Village, Kolathur Taluk, Chennai, Division - 71, Zone - 6ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 33.75ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.34/2026,நாள்.24.07.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**நதுநக.எண்.D1/0009/2026**

**ஆணையர் அவர்களின் 04.07.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 275/2026** **பொருள் எண்.03**

## தானப்பத்திரம்

மண்டலம்-06, கோட்டம்-76ல் Mr. N. Shantilal அவர்கள் New Door No.51/25, Old Door No.16/17, Strahans Road, Perambur Barracks, Chennai - 600012 comprised in R.S.No.2356 as per patta R.S.No.2356/29, Block No.37 of Purasaiwalkam Village, Purasaiwalkam Taluk, Chennai Districtல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/01142/2026, நாள்:21.02.2026ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 108.00 ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 17.07 மீ அகல Strahans Road அமையபெற்றுள்ளது. Strahans Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி, 24.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 23.18 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. N. Shantilal அவர்களிடமிருந்து New Door No.51/25, Old Door No.16/17, Strahans Road, Perambur Barracks, Chennai - 600012 comprised in R.S.No.2356 as per patta R.S.No.2356/29, Block No.37 of Purasaiwalkam Village, Purasaiwalkam Taluk, Chennai District, Division - 76, Zone - 06ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 23.18ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.35/2026,நாள்.24.07.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.D2/00907/2026**

**ஆணையர் அவர்களின் 04.07.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 276/2026** **பொருள் எண்.04**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நகரமைப்புத் துறை - சென்னை அடையார், சர்தார் படேல் சாலையில் அமைந்துள்ள M/s.CANCER INSTITUTE (WIA) கூடுதலாக கட்டிடம் கட்ட அனுமதி கோரியது - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து விலக்கு அளிக்கவும் - தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து விலக்கு அளிக்க அவ்வாரியத்திற்கு பரிந்துரை கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி.**

சென்னை அடையார், சர்தார் படேல் சாலை, புதிய எண்.38, பழைய எண்.18ல் அமைந்துள்ள M/s.CANCER INSTITUTE (WIA) என்ற நிறுவனம் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக திட்ட அனுமதி வேண்டி CMDAவில் விண்ணப்பித்ததை தொடர்ந்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (CMDA) எண்.PP/INST/S(B2)/285/2022, 23-01-2026 நாளிட்ட கடிதத்தின்படி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் *(CMDA)* திட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டிட அனுமதிக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய கட்டணம் செலுத்த வேண்டி கேட்பு அறிக்கை 08-04-2026 அன்று அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில் CANCER INSTITUTE (WIA) Adyar நிறுவனம் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு 06-05-2026 அன்று அளித்த கடிதத்தில் கீழ்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“As you may already know, Cancer Institute (WIA) located in Adyar, was established in 1954 by Dr.Muthulakshmi Reddy – the first women in India to Graduate in medicine. We are a not for profit, charitable institution committed to the care of underprivileged cancer patients over the last 7 decades. Dr.S.Krishnamurthi (son of Dr. Muthulakshmi Reddy) and Dr.V.Shanta were the driving force and responsible in building this institute from a 12 bedded hospital to what it is today. The Institute is a comprehensive cancer center comprising of a hospital to 675 beds, a research division, a college of oncological sciences, a division of preventive oncology, a palliative center and provides state of art treatment to one and all.

Our Institute treats about 20 - 25% of patients totally free and another 35% subsidized by governmental & non-governmental welfare organizations. This pioneering institution stands as an epitome in cancer care, a singular entity with the non – government sector. The hospital sees over 16,000 new patients and over 165,000 follow patients annually. They are drawn from all over Tamil Nadu, Andhra Pradesh, Pondicherry,

Karnataka and kerala. The ethose of the Cancer Institute (WIA) is" Service to all" irrespective of social or economic class. It was established with the faith that selfless service would generate its own strength and funds would always be found.

Recently we had applied for a building approval with your good office for which we have been advised to make the following payments Rs.4,83,000/- + Rs.20,000/- in favour of The Commissioner, Greater Chennai Corporation.

Rs.4,72,000/- in favour of MWGWF of the Tamilnadu construction worker welfare board.

We being an NGO, we would like to seek your kind support in providing us a waiver in paying the above fees, this will help us in treating a few needy cancer patients."

மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கண்டுள்ளவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி வழங்கிய கேட்பு அறிக்கையில் தெரிவித்துள்ள மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களான (1) கட்டிட உரிமக் கட்டணம் ரூ. 4,83,000/- (Building License fees) (2)கூர்ந்தாய்வு கட்டணம் (Scrutiny fees) ரூ. 20,000/- மொத்தம் ரூ. 5,03,000/- மற்றும் (3) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணமான ரூ.4,72,000/-ஐ அவ்வாரியத்திற்கு செலுத்துவதிலிருந்து விலக்கு (Waiver) அளிக்குமாறு கோரியுள்ளனர். இந்தத் தொகையை மிச்சப்படுத்தினால், அது ஏழை நோயாளிகளின் சிகிச்சைக்குப் பயனுள்ளதாக இருக்கும் என தெரிவித்ததின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய (1) கட்டிட உரிமக் கட்டணம் (Building License fees) ரூ. 4,83,000/- (2) கூர்ந்தாய்வு கட்டணம் (Scrutiny fees) ரூ.20,000/- மொத்தம் ரூ.5,03,000/-ஐ பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கலாம் என கருதப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.4,72,000/-ஐ அவ்வாரியத்திற்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க அவ்வாரியத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பரிந்துரை கடிதம் அனுப்பலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) சென்னை அடையார், சர்தார் படேல் சாலை புதிய எண்.38, பழைய எண்.18ல் அமைந்துள்ள M/s.CANCER INSTITUTE (WIA) கூடுதலாகக் கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதிக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டிட உரிமக் கட்டணம் (a) (Building License fees) ரூ.4,83,000/- (b) கூர்ந்தாய்வு கட்டணம் (Scrutiny fees) ரூ. 20,000/- மொத்தம் ரூ.5,03,000/-ஐ பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

(2) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.4,72,000/-ஐ அவ்வாரியத்திற்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் (நகரமைப்புத் துறை) அவர்கள் மூலம் பரிந்துரை கடிதம் அனுப்பவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.33/2026,நாள்.24.07.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பொ.து.ந.க.எண்.பி15 / 001596 / 2026**

**ஆணையர் அவர்களின் 18.06.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 277 / 2026** **பொருள் எண்.05**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை, ஓய்வூதியப்பிரிவு - ஓய்வூதியம் - ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 01.01.2026 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 58 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

அரசாணை எண்.98, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.14.05.2026-ன்படி மாநில அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.01.2026ஆம் நாள் முதல் அகவிலைப்படி ஏற்கனவே வழங்கப்பட்ட *58* விழுக்காட்டிலிருந்து *60* விழுக்காடாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள கூடுதல் அகவிலைப்படியினை *01.01.2026* முதற்கொண்டு வழங்கப்படவேண்டும் எனவும், உயர்த்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை அது *50* காசும், அதற்கு மேலும் இருக்குமாயின், அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே *50* காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் எனவும் மேற்படி அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏப்ரல் - *2026* நிலவரப்படி *8527* ஓய்வூதியர்கள் *7687* குடும்ப ஓய்வூதியர்கள் மொத்தம் *16214* நபர்கள் உள்ளனர். இவ்வரசாணையை இவர்களுக்கு நடைமுறைப்படுத்தி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வழங்க, தோராயமாக ஒரு மாதத்திற்கு ரூ.*47* இலட்சம் கூடுதலாக செலவாகும். நடப்பு நிதியாண்டிற்கு *(2026-2027) 3.83* கோடி கூடுதலாக செலவாகும்.

எனவே, அரசாணை எண்.98, நிதி(ஓய்வூதியம்)துறை, நாள்.14.05.2026-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி *58* விழுக்காட்டிலிருந்து *60* விழுக்காடாக *01.01.2026*ஆம் நாள் முதல் உயர்த்தி வழங்கவும், *01.01.2026* முதல் *30.04.2026* வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை மே-*2026*ஆம் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்க ஆணையர் அவர்களின் *18.05.2026* நாளிட்ட ஆணை பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.143/2026, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.க.கு.ந.க.எண். அ7/2086/2026**

**ஆணையர் அவர்களின் 23.07.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 278/2026** **பொருள் எண்.06**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - தமிழ்நாடு உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) - விதிகள் மற்றும் நடைமுறைகளை வகுத்தல்-01/01/2026 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெற்ற தகுதியுள்ள அரசு ஊழியர்களுக்கு, TAPS விதிகள் அறிவிக்கப்படும் வரை இடைப்பட்ட காலத்திற்கு - வாழ்வாதாரத்திற்காக, இடைக்காலத் தொகை (Interim Payment) வழங்குதல் குறித்த ஆணை - பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

*G.O.(Ms). No.07, Finance (PGC) Department, Dated. 09.01.2026 CPS*-திட்டத்தின் கீழ் பணிப்புரியும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் உறுதியான மற்றும் நிலையான ஓய்வூதியப் பலன்களை வழங்கும் நோக்கத்துடன், "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்" *(TAPS)* என்ற புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மற்றும் தமிழ்நாடு உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டம் 01.01.2026 முதல் நடைமுறைக்கு வரும் எனவும், இதுகுறித்த விதிகள் அறிவிக்கப்பட்ட பின்னரும், தேவையான சட்டரீதியான மற்றும் கணக்கியல் நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*G.O.(Ms). No.111, Finance (TAPS) Department, Dated. 16.06.2026*,ல் தமிழ்நாடு உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டம் *(TAPS)* விதிகள் மற்றும் நடைமுறைகளை வகுத்து வெளியிடும் வரை இடைப்பட்ட காலத்திற்கு, *01.01.2026* அன்று அல்லது அதற்கு பிறகு ஓய்வுபெற்ற தகுதியுள்ள அரசு ஊழியர்களுக்கு இடைக்காலத் தொகை வழங்க *(Interim Payout)* ஆணையிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் *07.07.2026* நாளிட்ட ஆணையில், *G.O.(Ms). No.07, Finance (PGC) Department, Dated. 09.01.2026* மற்றும் *G.O.(Ms). No.111, Finance (TAPS) Department, Dated. 16.06.2026* அரசாணைகள் மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த ஆணை பெறப்பட்டு இவ்வரசாணைகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள்/பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் *(1* முதல் *15* வரை*)* ஆகியோர்களுக்கு *14.07.2026* அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக *1) G.O.(Ms). No.07, Finance (PGC) Department, Dated. 09.01.2026* மற்றும் *2) G.O.(Ms). No.111, Finance (TAPS) Department, Dated. 16.06.2026*ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.149/2026, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>வ.து.ந.க.எண்.எம்1/001391/2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 01.07.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 279/2026** **பொருள் எண்.07**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - வணிக வளாகங்கள் - தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 - வணிக வளாக கடைகள் வாடகை /குத்தகை விடுதல் - விதி 316 “நகராட்சிக்கு சொந்தமான நிலையான சொத்துகளுக்கான உரிமம் வழங்குதல் (licencing of immovable property of municipality)” தொடர்பாக துணை விதி (1) மற்றும் (2)ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு - பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி.</u>**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023-ன் விதி 316 “நகராட்சிக்கு சொந்தமான நிலையான சொத்துகளுக்கான உரிமம் வழங்குதல் (licencing of immovable property of municipality)“ தொடர்பாக 16.12.2025 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் எண்.836ன்படி விதி 316 துணை விதி (1) மற்றும் (2)-ல் மாநகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகை அல்லது உரிமம் வாயிலாக ஒதுக்கீடு செய்வது குறித்து பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்றம் தனக்குச் சொந்தமான எந்தவொரு நிலத்தையும் அல்லது கட்டிடத்தையும் கீழ் குறிப்பிட்ட காலத்திற்கு மிகாமல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு ஒதுக்கீடு செய்யலாம் :-

அ) வணிக நோக்கமற்ற பயன்பாட்டிற்காக பொதுமக்களுக்கு **மூன்று ஆண்டுகள் வரை**;

ஆ) மத்திய அல்லது மாநில அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது மத்திய அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது கட்டுப்படுத்தப்படும் சட்டப்பூர்வ அமைப்புகளுக்கு **ஒன்பது ஆண்டுகள் வரை**;

இ) வணிக வளாகங்கள், கடைகள், பெட்டிக் கடைகள், சந்தைக் கடைகள், பேருந்து நிலையக் கடைகள், திறந்தவெளி கடைகள் மற்றும் சமுதாய நலக்கூடங்கள் போன்றவற்றிற்கு **பன்னிரண்டு ஆண்டுகள் வரை**, ஒவ்வொரு மூன்று ஆண்டு முடிவிலும் புதுப்பிக்கப்படும்.

<u>***(1-A)*** குத்தகை அல்லது வாடகைக்கு அனுமதி வழங்கும்போது, பின்வரும் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும், அதாவது:-</u>

அ) நகராட்சிகளின் அனைத்து அசையா சொத்துக்களுக்கும் முதல் முறையாக குத்தகை மற்றும் பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

ஆ) நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படும். மூன்று வருட குத்தகை காலம் முடிந்த பிறகு, மேலும் மூன்று

ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்தம் தானாகவே புதுப்பிக்கப்படும் அதிகபட்சமாக பன்னிரண்டு ஆண்டுகள் வரை புதுப்பிக்கப்படும்.

இ) ஒவ்வொரு ஆண்டும், குத்தகைத் தொகை ஐந்து சதவீதம் அதிகரிக்கப்பட வேண்டும். இந்த அதிகரிப்பு தற்போது நகராட்சி சொத்துக்களை வைத்திருக்கும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்.

ஈ) பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவடைந்த பிறகு, குத்தகை காலம் மேலும் நீட்டிக்கப்படாது.

உ) கட்டிடம் அல்லது நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் குத்தகை விகிதம் திருத்தியமைக்கப்படும், மேலும் சொத்து பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்படும்.

ஊ) குத்தகைதாரர் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் இறுதியில் தங்கள் குத்தகையைப் புதுப்பிப்பதற்கான பின்வரும் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். மேலும் குத்தகை நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு நகராட்சியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும்:-

i. 100 சதுர அடி வரை: ரூ.2,500/- (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்);

ii. 101 சதுர அடி முதல் 500 சதுர அடி வரை: ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்);

iii. 501 சதுர அடி முதல் 1000 சதுர அடி வரை: ரூ.7,500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்);

iv. 1,001 சதுர அடி மற்றும் அதற்கு மேல்: ரூ. 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்);

எ) குத்தகைதாரரின் சட்டப்பூர்வ வாரிசுகள், நிலுவையில் உள்ள அனைத்து நிலுவைத் தொகையையும் செலுத்தி, அவ்வப்போது நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குத்தகைத் தொகையை செலுத்த ஒப்புக்கொள்ளும்பட்சத்தில், குத்தகை உரிமைகளை வாரிசுதாரர் பெயருக்கு மாற்றக் கோரலாம். சட்டப்பூர்வ வாரிசுகள் பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவார்கள். பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பத்துடன் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) கட்டணம் செலுத்த வேண்டும்.

***(1-B)*** விவசாய நிலத்தைப் பொறுத்தவரை விவசாய நோக்கத்திற்காக, இருபது ஆண்டுகளுக்கு மிகாமல் மன்றம், குத்தகைக்கு வழங்கலாம்:

ஆனால், சிறப்பு மற்றும் அசாதாரண சூழ்நிலைகளில், சட்டத்தின் பிரிவு 78 இன் துணைப்பிரிவு (3) இன் பிரிவு (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு அப்பால் நீண்ட குத்தகைக்கு ஒப்புதல் அளிக்க அரசின் அனுமதியுடன் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ***(1-C)*** சந்தைகள், பேருந்து / வாகன நுழைவாயில், பூங்கா, இறைச்சி கூடம், கழிப்பறைகள்,

சாலையோரம், பேருந்து நிலைய காத்திருப்பு அறை / பொருட்கள் பாதுகாப்பு அறை, *LED* திரை மூலமாக விளம்பரம் செய்யும் கட்டண மற்றும் பயன்பாட்டு கழிப்பறைகள், எடை இயந்திரம் மற்றும் மீன் வளர்ப்பு போன்ற பிற பயன்பாட்டு சேவைகள் போன்ற நகராட்சி சொத்துக்களுக்கான உரிமதாரர் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பயன்பாட்டு கட்டணத்தை *(Usage charges)* வசூலிக்க தகுதியுடையவர்:-

அ) உரிமதாரரால் கட்டணங்களை வசூலிக்கும் உரிமை மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்கும், அதன் பிறகு மின்னணு ஒப்பந்தப்புள்ளி உட்பட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மீண்டும் புதியதாக நடத்தப்படும்.

ஆ) முதல் வருடத்திற்கான உரிமக் கட்டணத்தை உரிமதாரர் உரிமம் வழங்கும் நேரத்திலேயே செலுத்த வேண்டும்.

இ) இரண்டாம் ஆண்டுக்கான உரிமக் கட்டணம் ஐந்து சதவீதம் அதிகரிக்கப்பட்டு, இரண்டாம் ஆண்டின் தொடக்கத்தில் உரிமதாரர் அதைச் செலுத்த வேண்டும்;

ஈ) மூன்றாம் ஆண்டுக்கான உரிமக் கட்டணம் இரண்டாம் ஆண்டு கட்டணத்தில் ஐந்து சதவீதம் அதிகரிக்கப்பட்டு, மூன்றாம் ஆண்டின் தொடக்கத்தில் உரிமதாரர் அதைச் செலுத்த வேண்டும்.

உ) ஒவ்வொரு அடுத்தடுத்த ஆண்டிற்கும், உரிமக் கட்டணம் முந்தைய ஆண்டின் பிப்ரவரி மாதத்தின் கடைசி நாளிலோ அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தப்பட வேண்டும்.

***(2)*** குத்தகை / வாடகை பின்வரும் முறையில் செலுத்தப்பட வேண்டும், அதாவது:-

அ) மூன்று வருட குத்தகை காலம் முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர், திருத்தப்பட்ட விகிதத்தை ஏற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தக் கோரி, தற்போதைய குத்தகைதாரருக்கு முறையான அறிவிப்பு அனுப்பப்படும். ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில், மறு ஏல செயல்முறை தொடங்கப்படும்: வணிக வளாகங்களில் உள்ள கடைகள் அல்லது பொதுச் சந்தைகளில் உள்ள கடைகளுக்கு ஒவ்வொரு மாதமும் வாடகை வசூலிக்கப்பட வேண்டும்.

ஆ) உரிமக் கட்டணம், குத்தகை அல்லது வாடகை நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் செலுத்தப்படாதபட்சத்தில் பன்னிரண்டு சதவீத அபராத வட்டி விதிக்கப்படும்.

இ) குத்தகைக்கு விடப்பட்ட அல்லது வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் பின்வரும் முறையில் ஒழுங்குபடுத்தப்படும், அதாவது:-

1. குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் பொது சுகாதாரம் மற்றும் பராமரிப்பு பணிகளை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ளலாம்.
2. தமிழ்நாடு நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒழுங்குபடுத்துதல் சட்டம், *2017* (தமிழ்நாடு சட்டம் *42/2017*) இன் விதிகளின்படி, உரிமதாரர் அல்லது குத்தகைதாரரின் செலவில், நகராட்சி உரிமதாரர் அல்லது குத்தகைதாரருடன் குத்தகை ஒப்பந்தங்களை செயல்படுத்த வேண்டும்.

3. பொதுப்பணித் துறையின் அட்டவணைப்படி வாடகை நிர்ணயிக்கப்பட்டால், முதல் தளத்திற்கு பத்து சதவீதம், இரண்டாவது தளத்திற்கு பதினைந்து சதவீதம், மூன்றாவது தளம் மற்றும் அதற்கு மேல் இருபத்தைந்து சதவீதம் வரை வாடகை குறைக்கப்படலாம்.
4. கட்டிடத்தின் அமைவிடம் மற்றும் அணுகல் வசதியைப் பொருத்து, பொதுப்பணித்துறை அட்டவணையின்படி நிர்ணயிக்கப்பட்ட வாடகைக்கு, கட்டிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகைக்கு பத்து சதவீதம், பதினைந்து சதவீதம் மற்றும் இருபது சதவீதம் வரை தள்ளுபடி செய்யலாம்.
5. நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தை விட அதிக விகிதத்தை ஏலதாரர் குறிப்பிடும்போது, விகிதாசார அடிப்படையில் வைப்புத்தொகை அதிகரிக்கப்படும், மேலும் வைப்புத் தொகையில் ஐம்பது சதவீதத்திற்கு வங்கி உத்தரவாதச் சான்றிதழ் வசூலிக்கப்படும்.
6. குத்தகை அல்லது உரிமக் காலம் முடிவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு, சூழ்நிலைக்கேற்ப, வாடகையை மறு நிர்ணயம் செய்யும் செயல்முறை தொடங்கப்படும்.
7. நான்கு முறைக்கு மேல், ஒரு மின்-ஏலம் உட்பட பல முறை ஏலங்கள் நடத்தப்பட்டால், ஏலதாரர் உத்தேசிக்கப்பட்ட விகிதத்தை ஏற்கவில்லை என்றால், பத்து சதவீதம் வரை குறைக்கப்படலாம் இருப்பினும், இந்த வரம்பை மீறும் எந்தவொரு குறைப்பும் குத்தகைக் காலத்தின் போது வழங்கப்படலாம்.
8. குத்தகைக் காலத்தின் போது குத்தகை/வாடகை ஒவ்வொரு ஆண்டும் ஐந்து சதவீதம் அதிகரிக்கப்படும்.
9. புதிய கட்டுமானங்களுக்கு குத்தகைதாரரின் குத்தகை காலத்திற்குப் பிறகு வாடகையை மறு நிர்ணயம் செய்யும்போது, பொதுப்பணித்துறை விகிதம் சந்தை விகிதத்தை விட இருபத்தைந்து சதவீதத்திற்கு மேல் இருந்தால், உயர்ந்த தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.
10. கட்டிடங்களை புனரமைக்கும் போது, முன்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் *(MoU)* கையெழுத்திட்ட தற்போதைய குத்தகைதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், அதே நேரத்தில் வெளிப்படையான குலுக்கல் முறையால் ஒதுக்கப்பட்ட திறந்த ஒப்பம் சராசரி மதிப்பை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், பிற நிபந்தனைகளையும் ஏற்கும் பட்சத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.
11. திருத்தப்பட்ட விகிதங்களில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால், அவற்றைத் தீர்க்க வட்டார அளவில் துணைக் குழுக்கள் அமைக்கப்படும். மேலும் நகராட்சிகளை மறுசீரமைப்பதன் அடிப்படையில் இயக்குநர் மூலம் அமைக்கப்பட்ட குழுக்கள் மறுசீரமைக்கப்படலாம்.

12. துணைக்குழுவால் எடுக்கப்பட்ட முடிவு மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட வேண்டும். துணைக்குழு மட்டத்தில் தீர்க்க முடியாத பிரச்சினைகள், மேலும் மதிப்பாய்வுக்காக மாநில அளவிலான குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்.

கடைசியாக *01.09.2023* அன்று முதல் *3* ஆண்டுக்காலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கான மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. இக்காலம் *31.08.2026* உடன் முடிவடைகிறது. எனவே, *01.09.2026* முதல் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சி கடைகளுக்கான குத்தகையினை புதுப்பிக்கலாம்.

மேற்படி தமிழ்நாடு அரசிதழில் குறிப்பிடப்பட்ட திருத்தங்களின்படி மேல் நடவடிக்கையினைத் தொடர, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(வ.வி.ம.நி.)* கூட்டத்தில் தீர்மான எண்.144/2026, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு *(வ.வி.ம.நி.)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**<u>ம.அ.8ந.க.எண்.சி1/4558/2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 09.07.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 280/2026** **பொருள் எண்.08**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-8 - கோட்டம்-94 முதல் 108 வரை தூய்மை பணிக்காக தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழு மூலமாக பணிபுரியும் 252 இரவு நேர தூய்மை பணியாளர்கள் மற்றும் BOV ஓட்டுநர்களுக்கு 01.07.2026 முதல் 31.12.2026 வரை பணி தொடர்வதற்கு - ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 17.02.2026 நாளிட்ட அனுமதி மற்றும் மன்ற தீர்மான எண்.232/2026, நாள்.24.02.2026ன்படி 252 தற்காலிக தூய்மை பணியாளர்கள் மற்றும் BOV ஓட்டுநர்களுக்கு 03.05.2026 முதல் 30.06.2026 வரை 59 நாட்களுக்கு இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் அனுமதி பெறப்பட்டு இரவு நேர தூய்மை பணிகள் மற்றும் BOV ஓட்டுநர் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இரவு நேர தற்காலிக தூய்மை பணிகள் மற்றும் BOV ஓட்டுநர் பணிக்கான மன்ற அனுமதி 30.06.2026 அன்றுடன் நிறைவடைவதால், தூய்மை பணியின் அவசியம் கருதி 01.07.2026 முதல் 31.12.2026 வரை 184 நாட்களுக்கு தொடர்ச்சியாக பணியமர்த்த வேண்டியும் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.761/- என்ற அடிப்படையில் 184 நாட்களுக்கு தேவையான 252 x 761 x 184 = ரூ.3,52,86,048/- நிதி தேவைப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, திடக்கழிவு மேலாண்மை துறையின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின்படி (தி.க.மே.து.ந.க.எண்.அ3/5150/2025) தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.761/- என்ற அடிப்படையில் 184 நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் 252 x 761 x 184 = ரூ.3,52,86,048/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நாற்பத்து எட்டு மட்டும்) கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண்.210 – 100 – 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு வேண்டியுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 09.07.2026 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆகையால், கீழ்காணும் இனங்களின் மீது மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், 252 தற்காலிக பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிதியாண்டில் ஊதியம் உயர்த்தி வழங்கும் பொழுது அதனடிப்படையில் தின கூலியினை உயர்த்தி வழங்கவும்,

எனவே,

1. மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரையில் இரவு நேர தூய்மை பணி மேற்கொள்ள அண்டை வீட்டு குழுவின் வாயிலாக 252 தற்காலிக தூய்மை

பணியாளர்களை கொண்டு தூய்மை பணிகள் மற்றும் BOV ஓட்டுநர் பணி மேற்கொள்ள 01.07.2026 முதல் 31.12.2026 வரை 184 நாட்களுக்கு பணியமர்த்தி பணி மேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2. இப்பணிக்கு தேவையான தோராய செலவீனம் 252 x 761 x 184 = ரூ.3,52,86,048/- ஆகும் இதற்கான கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண்.210 – 100 – 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“21.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.061/2026, நாள்.21.07.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் இப்பொருள் குறித்து தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தற்காலிக தூய்மை பணியாளர்கள் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண். 146/2025, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.8.ந.க.எண்.சி1 / 4559 / 2026**

**ஆணையர் அவர்களின் 09.07.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 281/2026** **பொருள் எண்.09**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-8 - கோட்டம்-94 முதல் 108 வரை தூய்மை பணிக்காக தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழு மூலமாக பணிபுரியும் 850 தூய்மை பணியாளர்களுக்கு 22.06.2026 முதல் 18.11.2026 வரை பணி தொடர்வதற்கு ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8க்குட்பட்ட கோட்டங்களில் பணிபுரியும் 850 தற்காலிக தூய்மை பணியாளர்களின் பணிக்கான மன்ற அனுமதி 21.06.2026 அன்றுடன் நிறைவடைவதால், தூய்மை பணியின் அவசியம் கருதி 22.06.2026 முதல் 18.11.2026 வரை 150 நாட்கள் பணி தொடர்ச்சி வேண்டியும் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.761/- என்ற அடிப்படையில் 22.06.2026 முதல் 18.11.2026 வரை 150 நாட்களுக்கு தேவையான 850 x 761 x 150 = ரூ.9,70,27,500/- நிதி தேவைப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை துறையின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின்படி (தி.க.மே.து.ந.க.எண்.அ3/5150/2025) தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.761/- என்ற அடிப்படையில் 150 நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் 850 x 761 x 150 = ரூ.9,70,27,500/- ஐ (ரூபாய் ஒன்பது கோடியே எழுபது இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண்.210 – 100 – 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு வேண்டியுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 09.07.2026 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆகையால், கீழ்காணும் இனங்களின் மீது மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், 850 தற்காலிக பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிதியாண்டில் ஊதியம் உயர்த்தி வழங்கும் பொழுது அதனடிப்படையில் தின கூலியினை உயர்த்தி வழங்கவும், வரும் காலங்களில் காலிப்பணியிடங்களை நிரந்தர பணியாளர்கள் மூலம் பணியமர்த்தும் பட்சத்தில் தற்காலிக பணியாளர்களை வெளியேற்றவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரையில் தூய்மை பணி மேற்கொள்ள அண்டை வீட்டு குழுவின் (SHG) வாயிலாக 850 தற்காலிக தூய்மை பணியாளர்களை கொண்டு 22.06.2026 முதல் 18.11.2026 வரை 150 நாட்களுக்கு பணியமர்த்தி பணி மேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2. இப்பணிக்கு தேவையான தோராய செலவீனம் ரூ.9,70,27,500/-ஐ ஆகும் இதற்கான கணக்கு குறியீட்டு எண்.40–41–03, கணக்கு தலைப்பு எண். 210–100–601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“21.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.062/2026, நாள்.21.07.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் இப்பொருள் குறித்து தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தற்காலிக தூய்மை பணியாளர்கள் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.147/2025, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**த.தொ.நு.மை.ந.க.எண்.சி1/1011/2025**

**ஆணையர் அவர்களின் 02.07.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 282/2026** **பொருள் எண்.10**

**பெருநகர சென்னை மாநகராட்சி - தகவல் தொழில்நுட்ப மையம் - வாட்ஸ் அப் அடிப்படையிலான தகவல் தொடர்பு அமைப்பு உருவாக்கம் மற்றும் மாநகராட்சியின் ஆன்லைன் சேவைகளுடன் ஒருங்கிணைத்தல் பணிக்கான ஒப்பந்தம் 30.06.2026 அன்றுடன் முடிவடைந்தது - தமிழ்நாடு வெளிப்படைத்தன்மை ஒப்பந்தவிதி 2000ன்படி 01.07.2026 முதல் 30.09.2026 வரை மூன்று மாதங்களுக்கு நீடிப்பு செய்தமைக்கு பின்னேற்பு அனுமதி.**

வாட்ஸ் அப் அடிப்படையிலான தகவல் தொடர்பு அமைப்பு உருவாக்கம் மற்றும் மாநகராட்சியின் ஆன்லைன் சேவைகளுடன் ஒருங்கிணைத்தல் பணிக்காக *M/s.Pinnacle Telservices Pvt. Ltd.* நிறுவனத்திற்கு ரூ.*3,56,03,904/- (GST உட்பட)* மதிப்பில் பணி ஆணை வழங்கப்பட்டு, அப்பணி தற்போது செயல்பாட்டில் உள்ளது. மேற்கண்ட ஒப்பந்தகாலம் *30.06.2026* அன்று முடிவடையவுள்ளது.

இப்பணிக்கான புதிய ஒப்பந்தப்புள்ளி*(Tender)* கோருவதற்கான நடவடிக்கைகள் முன்னதாகவே தொடங்கப்பட்டு, அதற்கான கோப்பு உருவாக்கப்பட்ட நிலையில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் *(Model Code of Conduct)* அமலுக்கு வந்ததன் காரணமாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலவில்லை. பின்னர் தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கப்பட்டதைத் தொடர்ந்து, புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான கோப்பு மீண்டும் செயல்படுத்தப்பட்டது. எனினும், நிர்வாக ஒப்புதல் வழங்கும் நடைமுறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக, புதிய ஒப்பந்தத்திற்கான ஒப்புதல்களைப் பெறும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மாநகராட்சியின் பொதுமக்கள் சேவைகள் மற்றும் ஆன்லைன் சேவைகள் தடையின்றி தொடர்ந்து செயல்பட வேண்டிய அவசியத்தையும், புதிய ஒப்பந்தத்தை இறுதி செய்ய கூடுதல் கால அவகாசம் தேவைப்படுவதையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு வெளிப்படைத்தன்மை ஒப்பந்தவிதிகள், *2000*-இன் விதிகளின்படி, *M/s. Pinnacle Telservices Pvt.Ltd.* நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள தற்போதைய ஒப்பந்தத்தை *25%* அளவிற்கு, அதாவது ரூ.*89,00,976/- (GST உட்பட)* மதிப்பில், *01.07.2026* முதல் *30.09.2026* வரை அல்லது புதிய ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் நாள் வரை (எது முன்னதாக நிகழுகிறதோ அதுவரை) நீட்டிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. M/s. Pinnacle Telservices Pvt. Ltd. நிறுவனத்திற்கு, தமிழ்நாடு வெளிப்படைத்தன்மை விதிகள், 2000-இன் விதிகளின்படி, தற்போதைய ஒப்பந்த மதிப்பில் 25% அளவிற்கு, ரூ.89,00,976/- (ரூபாய் எண்பத்தொன்பது இலட்சத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஆறு மட்டும்)

மதிப்பில், 01.07.2026 முதல் 30.09.2026 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டித்து மற்றும் அக்காலப்பகுதிக்கான ஒப்பந்தத் தொகையை வழங்குவதற்கு பின்னேற்பு அனுமதி வழங்கவும்,

2. இப்பணிக்கான உடன்படிக்கை மற்றும் 2% பிணைவைப்பு தொகை செலுத்துவதற்கு அனுமதியும்,
3. இதற்கான செலவினங்களை தகவல் தொழில்நுட்ப மையத்தின் பிரிவு எண் 000-205 கணக்கு தலைப்பு எண் 220-53-02-02 (e-Gov-Development and customisation – Vendors,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“22.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.57/2026, நாள்.22.07.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.145/2026, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**மி.து. ந.க. எண். மே2 / பி10 / 2176 / 2025**

**ஆணையர் அவர்களின் 22.07.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 283/2026** **பொருள் எண்.11**

**பெருநகர சென்னை மாநகராட்சி -- மின்துறை – பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரை உள்ள 15 மண்டலங்களின் அனைத்து வார்டுகளிலும் 3,01,969 எண்ணிக்கையில் தெரு விளக்கு மற்றும் 507 எண்ணிக்கையிலான உயர் கோபுர மின் விளக்குகள் பராமரிப்பு ஒரு வருட காலத்திற்கு தேவையான ஆட்கள், அலுமினியம்/ஹைட்ராலிக் ஏணி வாகனங்கள் ஆகியவற்றை கொண்டு அவுட்சோர்சிங் (Outsourcing) ஒப்பந்த அடிப்படையில் பராமரிக்கும் பணி - The Tamil Nadu Transparency In Tenders Rules, 2000 ன் படி ஒப்பந்தத்தின் பணி காலத்தை 25% - மூன்று மாத காலத்திற்கு நீட்டிக்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறையின் முக்கிய பணியான பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பயணத்திற்கான பாதுகாப்பிற்கும் தெருவிளக்குகள் அமைக்க வேண்டியது அவசியமானதாகும்.

அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களின் அனைத்து வார்டுகளிலும் 3,01,969 எண்ணிக்கையில் தெரு விளக்கு மற்றும் 507 எண்ணிக்கையிலான உயர் கோபுர மின் விளக்குகள் பராமரிப்பு ஒரு வருட காலத்திற்கு தேவையான ஆட்கள், அலுமினியம்/ஹைட்ராலிக் ஏணி வாகனங்கள் ஆகியவற்றை கொண்டு அவுட்சோர்சிங் (Outsourcing) முறையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் ஆணை வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள ஒப்பந்தம் ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) ஆகும். அதன் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 1:**

| Sl No. | Name of work | Work commencement Date (From LOA Date) | Contract completion Date | Name of the Contractor | Work Order value Incl. GST@18% In Rs. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | E.L.D.C.NO/SMII/P10/2176/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 14,153 nos. of street light lamp post and 23 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 1 | 11-08-2025 | 10-08-2026 | M/s. R.V Engineering Construction | 2,96,98,678.72 |
| 2 | E.L.D.C.NO/SMII/P10/2177/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 12,790 nos. of street light lamp post and 25 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 2 | 11-08-2025 | 10-08-2026 | M/s Kumaran Industries | 2,72,67,907.28 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | E.L.D.C.NO/SMII/P10/2178/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 20,004 nos. of street light lamp post and 37 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 3 | 11-08-2025 | 10-08-2026 | M/s Murugan Electrical Traders | 3,79,96,169.09 |
| 4 | E.L.D.C.NO/SMII/P10/2179/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,747 nos. of street light lamp post and 29 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 4 | 11-08-2025 | 10-08-2026 | M/s.R.K.M. Electricals | 3,89,11,781.36 |
| 5 | E.L.D.C.NO/SMII/P10/2180/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 15,525 nos. of street light lamp post and 47 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 5 | 11-08-2025 | 10-08-2026 | M/s Murugan Electrical Traders | 3,48,68,611.78 |
| 6 | E.L.D.C.NO/SMII/P10/2181/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,159 nos. of street light lamp post and 47 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 6 | 11-08-2025 | 10-08-2026 | M/s Murugan Electrical Traders | 3,96,19,817.82 |
| 7 | E.L.D.C.NO/SMII/P10/2182/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 27,842 nos. of street light lamp post and 59 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 7 | 11-08-2025 | 10-08-2026 | M/s.V.K Contractor | 4,88,00,277.06 |
| 8 | E.L.D.C.NO/SMII/P10/2183/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 21,288 nos. of street light lamp post and 22 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 8 | 11-08-2025 | 10-08-2026 | M/s. R.K.M Electricals | 4,26,71,934.20 |
| 9 | E.L.D.C.NO/SMII/P10/2184/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,175 nos. of street light lamp post and 57 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 9 | 11-08-2025 | 10-08-2026 | M/s. Sai Enterprises | 4,56,50,969.40 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | E.L.D.C.NO/SMII/P10/2185/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,995 nos. of street light lamp post and 34 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 10 | 11-08-2025 | 10-08-2026 | M/s. R.K.M Electricals | 4,64,86,772.78 |
| 11 | E.L.D.C.NO/SMII/P10/2186/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 20,754 nos. of street light lamp post and 20 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 11 | 11-08-2025 | 10-08-2026 | 1. M/s Kumaran Industries | 3,95,84,177.05 |
| 12 | E.L.D.C.NO/SMII/P10/2187/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 15,870 nos. of street light lamp post and 25 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 12 | 11-08-2025 | 10-08-2026 | M/s Hi Tech Tronics | 3,25,93,167.63 |
| 13 | E.L.D.C.NO/SMII/P10/2188/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,939 nos. of street light lamp post and 54 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 13 | 11-08-2025 | 10-08-2026 | M/s Kumaran Industries | 4,65,12,003.18 |
| 14 | E.L.D.C.NO/SMII/P10/2189/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,868 nos. of street light lamp post and 21 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 14 | 11-08-2025 | 10-08-2026 | M/s. R.K.M Electricals | 4,35,98,326.30 |
| 15 | E.L.D.C.NO/SMII/P10/2190/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,860 nos. of street light lamp post and 7 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 15 | 11-08-2025 | 10-08-2026 | M/s Murugan Electrical Traders | 3,81,85,832.15 |

தற்போதைய ஒப்பந்தம் 10.08.2026 அன்று முடிவடைகிறது. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் இரவு நேர போக்குவரத்திற்கு தெருவிளக்கு பராமரிப்பு தொடர்ந்து நடைபெறவேண்டியது அவசியமாகிறது.

மண்டலம் 1 முதல் 15 வரை AEE வேண்டுகோளின்படி, 1 முதல் 15 மண்டலங்களில் தெருவிளக்குகள் மற்றும் தேவையான ஆட்கள், அலுமினியம்/ஹைட்ராலிக் ஏணி வாகனங்கள் உள்ளிட்ட உயர் கம்பங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கான

தொடர்ச்சியான தேவை அவசியமாகிறது, எனவே, புதிய ஒப்பந்த புள்ளி கோரும் வரை பணி தடைபடாமல் இருக்க, தற்போதைய ஒப்பந்ததாரர்களுடைய ஒப்பந்தத்தை மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய முன்மொழியப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள மண்டலங்கள் 1 முதல் 15ல் மேற்கொள்ளப்படும் தெரு விளக்கு ஒப்பந்தத்தை ஒரு வருட காலத்திற்கான (365 நாட்கள்) ஒப்பங்கள் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் மன்ற தீர்மான எண்;872/2025 நாள்:30.07.2025 அன்று பரிந்துரைக்கப்பட்டு, மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

"As per The Tamil Nadu Transparency In Tenders Rules, 2000, Section -14(9) 'The Tender Accepting Authority shall be ordinarily permitted to vary the quantity finally ordered only to the extent of twenty five percent either way of the requirement indicated in the tender documents" ன் படி ஒரு வருட காலத்திற்கான ஒப்பந்தத்தில் 25% மூன்று மாத காலத்திற்கு ஒப்பம் நீட்டிக்கப்படலாம். எனவே பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மூன்று மாத (90 நாட்கள்) காலத்திற்கு நீட்டிப்புச் செய்ய நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதியின்) ஒப்புதல் வேண்டி, மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்க அனுமதி வழுங்க வேண்டப்படுகிறது.

இப்பணிக்கான ஒப்பந்த நீட்டிப்பின் மதிப்பு அட்டவணை 2ல் குறிப்பிட்டுள்ளப்படி பின்வருமாறு

**அட்டவணை 2:**

| Sl No | Name of work | Name of the Contractor | Work Order value Incl. of GST@18% In Rs. | Value of extension (3months) Incl.of GST@ 18% In Rs. | Date from which extension of work contract period is requested |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | E.L.D.C.NO/SMII/P10/2176/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 14,153 nos. of street light lamp post and 23 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 1 | M/s. R.V Engineering Construction | 2,96,98,678.72 | 73,27,281.74 | 11-08-2026 |
| 2 | E.L.D.C.NO/SMII/P10/2177/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 12,790 nos. of street light lamp post and 25 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 2 | M/s Kumaran Industries | 2,72,67,907.28 | 67,27,472.64 | 11-08-2026 |
| 3 | E.L.D.C.NO/SMII/P10/2178/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 20,004 nos. of street light lamp post and 37 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 3 | M/s Murugan Electrical Traders | 3,79,96,169.09 | 93,74,913.32 | 11-08-2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | E.L.D.C.NO/SMII/P10/2179/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,747 nos. of street light lamp post and 29 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 4 | M/s.R.K.M. Electricals | 3,89,11,781.36 | 96,00,592.57 | 11-08-2026 |
| 5 | E.L.D.C.NO/SMII/P10/2180/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 15,525 nos. of street light lamp post and 47 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 5 | M/s Murugan Electrical Traders | 3,48,68,611.78 | 86,02,412.40 | 11-08-2026 |
| 6 | E.L.D.C.NO/SMII/P10/2181/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,159 nos. of street light lamp post and 47 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 6 | M/s Murugan Electrical Traders | 3,96,19,817.82 | 97,75,000.58 | 11-08-2026 |
| 7 | E.L.D.C.NO/SMII/P10/2182/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 27,842 nos. of street light lamp post and 59 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 7 | M/s.V.K Contractor | 4,88,00,277.06 | 1,20,41,232.12 | 11-08-2026 |
| 8 | E.L.D.C.NO/SMII/P10/2183/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 21,288 nos. of street light lamp post and 22 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 8 | M/s. R.K.M Electricals | 4,26,71,934.20 | 1,05,28,194.35 | 11-08-2026 |
| 9 | E.L.D.C.NO/SMII/P10/2184/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,175 nos. of street light lamp post and 57 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 9 | M/s. Sai Enterprises | 4,56,50,969.40 | 1,12,63,368.10 | 11-08-2026 |
| 10 | E.L.D.C.NO/SMII/P10/2185/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,995 nos. of street light lamp post and 34 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 10 | M/s. R.K.M Electricals | 4,64,86,772.78 | 1,14,69,632.92 | 11-08-2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
